**தலைப்பு 254 – பதிவாளர் நாயகத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை – 2017 ஆம் ஆண்டு**

---

2017 ஆம் ஆண்டு 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்ட 2016 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்பு மற்றும் விடய இலக்கத்திற்கமைவாக ஒதுக்கீட்டுக் கணக்கு, கணக்கிணக்கக் கூற்று மற்றும் வருடாந்த வரவு செலவு திட்டத்தின் 3.1.1 அட்டவணைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள வருமான குறியீடுகளுக்கு ஏற்புடையதாக 02 வருமானக் கணக்குகளும் பதிவாளர் நாயகத் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அந்தக் கணக்குகளிலும் கணக்கிணக்கக் கூற்றுகளிலும் வெளிப்படுத்தும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றுகை என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரை பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர், கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் அரசிறை கணக்கீட்டு உத்தியோகத்தர் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்கீட்டு நெறிமுறை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவையில் நிதி ஒழுங்குவிதி 124 இன் பிரகாரம் அரசிறை சேர்த்தலும், அரசாங்கத்தின் பிற பணங்களைச் சேர்த்தலும் மற்றும் அரசாங்கத்தின் எல்லா நிதி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் தொடர்பான பொது கண்காணிப்பும் நிதி அமைச்சரின் பொறுப்பாகும். ஆகவே அவரால் அந்த பொறுப்பினை நிறைவேற்றும் பொருட்டு நிதி ஒழுங்குவிதிகள் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களை நியமனம் செய்யப்பட்டுள்ளது. நிதி ஒழுங்குவிதி 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத்து தலைவர் தமது திணைக்களத்தின் சகல விதமான நிதிக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோத்தராவதுடன், அரசிறைக் கணக்கீட்டு உத்தியோகத்தரை திறைசேரியால் நியமனம் செய்யப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்குள் தமது கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றப்பட்டு சமர்ப்பிக்கப்படும் கணக்கீடுகள் மற்றும் கணக்கிணக்க கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகளும், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் நிருவாக ஒழுங்குவிதிகளுக்கமைவாக பேணிச் செல்லுதல், தயாரித்தல், நியாயமான வகையில் சமர்ப்பிப்பதற்கு ஏற்புடையதான உள்ளக கட்டுப்பாடுகளை திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் மற்றும் அவற்றை பேணதலும் இந்த பொறுப்புகளுள் உள்ளடங்கும்.

## 1.3 கணக்காய்வு விடயவெல்லை

தலைப்பு 254 – பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றுகை தொடர்பில் திட்டமிடல், அரச செலவுகள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வளங்களை முகாமைத்துவம் செய்தல், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளை பயன்படுத்தல், சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு ஒழுங்கமைதல், புத்தகங்கள், ஆவணங்கள், அறிக்கைகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுகளை இற்றைப்படுத்தி பேணுதல், கணக்குகளை தயாரித்து காலத்திற்கேற்றவாறு சமர்ப்பித்தல், செயலாற்றுகை சுட்டிகளை அடிப்படையாகக்கொண்டு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் செயலாற்றுகை அறிக்கைகளை வழங்குதல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளின்கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மீளாய்விற்கான ஆண்டில் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 09 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் வழங்கப்பட்டது. கணக்கீடுகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுகள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள், கணக்காய்விற்கு சமர்ப்பித்த திட்டமிடல், கணக்கீடுகள், கணக்கிணக்கக் கூற்றுகள் மற்றும் செயலாற்றுகை அறிக்கைகள் பற்றிய மீளாய்வுகள் அத்துடன் கொடுக்கல்வாங்கல்களில் மாதிரிகள் தொடர்பான உறுதிப்பாடுகள் பரிசோதனைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அந்த மீளாய்வு, பரிசோதனைகளின் விடயவெல்லை மற்றும் போதியளவு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள அலுவலக பதவியணி, ஏனைய வளங்கள், கால அவகாசம் போன்ற எல்லைகளுக்குள் இயன்றவரை விரிவான கணக்காய்வை மேற்கொள்ள முடியுமானவாறு தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்பு

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக பதிவாளர் நாயகத் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் வெளிப்படுத்திக்கொண்ட கணக்காய்வு அவதானிப்புகள் மேற்படி 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விபரமாக காட்டப்பட்டுள்ளது. அந்த அவதானிப்புகளில் போதியளவு மற்றும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகளை, இவ்வறிக்கையில் 2.1 பந்தியிலிருந்து 2.14 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிதி நிருவாகத்தில் போதியளவினை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி கோவையில் 128 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை நிறைவேற்றும்போது வெளிப்படுத்திக்கொண்ட, பின்வரும் குறிப்பில் சாரம்சப்படுத்தி காட்டப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புகளுக்கமைவாக கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்கீட்டு நெறிமுறைகளை திருப்திகரமாக நிறைவேற்றியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| **நிதி ஒழுங்குவிதி 128 (1) பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்கீட்டு நெறிமுறை** | **கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாமை** | **அவதானிப்பு உள்ளடக்கிய அறிக்கையில் பந்தி தொடர்** |
|---|---|---|
| நிதி ஒழுங்குவிதிகள் | | |
| 128 (1)(அ) அனுமதித்த முயற்சிகளுக்கு நிதி ஏற்பாடு அளிக்கையில் பாராளுமன்றத்துக்கு இருந்த எண்ணங்களுக்கும் அரசாங்க கொள்கைக்கும் மதிப்புக் கொடுத்து அவரின் திணைக்கள வேலைகள் திட்டமிடப்பட்டு உரிய காலத்தில் | (i) செயற்றிட்டத்திற்கு இணங்கியொழுகாமை | 2.1<br>2.3<br>2.8 |
| | (ii) பெறுகை நடைமுறைகளை போதியளவில் திட்டமிடப்படாமை | 2.2 |
| | (iii) வரவு செலவு மதிப்பீடுகளை இயல்பாக தயாரிக்கப்படாமை | 2.3.2 |

| | | | |
|---|---|---|---|
| | நிறைவேற்றப்படுகின்றன எனவும், அவ்வாண்டுக்கென விதிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கும் அல்லது குறிப்பிட்டுள்ள இலக்கை எய்துவதற்கும் அல்லது இவ்விரண்டிற்கும் முயற்சி செய்யப்படுகின்றதெனவும் | (iv) எதிர் பார்க்கப்பட்ட விளைவளவு மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை<br>(v) பெறுகை நடைமுறை நடைமுறைப்படுத்துவதில் காணப்பட்ட குறைப்பாடுகள் | |
| | அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளையும் பிற குறைநிரப்பு அறிவுறுத்துரைகளையும் தனது திணைக்களம் கடைபிடிக்கின்றதெனவும், தேவையான விடயத்தில் அவை திணைக்கள அறிவுறுத்துரைகளால் குறைநிரப்பப்படுகின்றனவெனவும் | இணங்கியொழுகாமை | 2.12 |
| 128(1)(உ) | அரசாங்கத்துக்குச் சொந்தமான அல்லது அதன் கட்டுக்காப்பிலுள்ள பணம், பண்டங்கள், சாதனங்கள் பிற சொத்துக்கள் ஆகியவற்றைப் பாதுகாத்துப் பேணுவதற்கு போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றனவெனவும், இவை காலத்துக்குக் காலம் சரிபார்க்கப்படுகின்றனவெனவும், இவை தீர்வு செய்யப்படும்போது அத்தகைய தீர்வு செய்தல் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்கவுள்ளனவெனவும் | சொத்துக்கள் முகாமைத்துவத்தில் குறைப்பாடு | 2.4 |
| 128(1) (ஏ) | நிலுவையாகவுள்ள வருமதிகளை அறவிடுவதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளனவெனவும், அத்தகைய வேலைக்கென ஒதுக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் நிலுவைகள் சம்பந்தமாகவும் அவைகளை விரைவில் அறவிடுவதற்கு எடுத்த நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் காலாண்டுக்கொருமுறையாவது அல்லது வேறு வழியில் பணிக்கப்பட்டவாறு தனக்கு அறிவிக்கின்றார்கள் எனவும், | 1. நிலுவை வருமானம் அறவிடல்<br>2. அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கில் நிலுவை கடன் மீதி அறவிடல் | 2.9(அ)(i)<br>2.10.(அ) |

| | | | |
|---|---|---|---|
| 128(1) (க) | கணக்கீட்டு உத்தியோகத்தராகப் பொறுப்பேற்றிருக்கும் செலவுத் தலைப்பின் ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டம் சம்பந்தமாக நிதியாண்டு முடிவில் ஓர் ஒதுக்கீட்டுக் கணக்கு, பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது எனவும். | ஒதுக்கீட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள குறைப்பாடுகள் | 2.8 |
| 128 (1)(ஐ) | உத்தியோகத்தர்களது.'.பணியாளர்களது தாமதம், கவனயீனம், தவறு மற்றும் மோசடி காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்படும் இழப்புகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதி 103 தொடக்கம் 108 வரையிலான ஒழுங்குவிதிகளில் விதிக்கப்பட்டுள்ள நடைமுறை விதிக் கோவையை கணக்கீட்டு உத்தியோகத்தர்களால் கடைபிடிக்கப்பட்டு நிதி ஒழங்குவிதிகள் 156(1) இன் பிரகாரம் அத்தகைய இழப்புகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள்.'.பணியாளர்கள் மீது மிகை விதிப்பு விதிப்பதற்கும், | பணம் தொடர்பாக பணியாற்றும் அலுவலர்களிடமிருந்து பிணை வைப்புகளை பெற்றுக்கொள்ளுதல் | 2.6.(ஆ) |
| 128(2)(அ) | வருமானக் குறியீட்டுக்கு ஏற்புடையதான வருமான மதிப்பீடுகளை முற்று முழுதாகவும், இயன்றவரை சரியாகவும் தயாரித்தல் | எதிர் பார்க்கப்பட்ட வருமானத்தை திரட்டுவதற்கு இயலாமை | 2.9.(ஆ)(i) |
| 128(2) (ஈ) | தான் பொறுப்பாகவுள்ள அரசிறையின் எப்பகுதியாவது பிற திணைக்களங்களாலும் அலுவலகங்களாலும் சேகரிக்கப்படும்போது அவர்களிடமிருந்து திரட்டுகள் பெறப்பட்டு அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள், அரச வருமான மதிப்பீடுகளிலும் முறையாக மேற்படி (அ) பிரகாரம் தான் தயாரிக்கும் அரசிறை மதிப்பீடுகள், அரசிறைக் கணக்குகள், திரட்டுகள் ஆகியவற்றில் சேர்க்கப்படுகின்றன எனவும், | அரசிறை திரட்டுகின்ற ஏனைய திணைக்களங்களிடமிருந்து அரசிறை மதிப்பீடுகளுக்கு திரட்டுகளை சேர்க்கப்படாமை | 2.9. (அ)(i) |

| | | | |
|---|---|---|---|
| 128 (2) இ | நிலுவையாகவுள்ள அரசிறையை விரைவில் சேகரிப்பதன் பொருட்டு கணக்கீட்டு உத்தியோகத்தர்களுடனும் அவற்றை சேகரிப்பதற்குரிய திணைக்களங்களுடனும் ஆலோசித்து விசேட ஒழுங்குகள் செய்யப்படுகின்றன எனவும். | வருமான குறியீட்டுக்கு ஏற்புடையதாக வருமானம் திரட்டும் நிறுவனங்களிலிருந்து நிலுவை வருமானம் தொடர்பாக திரட்டுகளை உரியவாறு சேகரிக்கப்பட்டு இருக்கவில்லை. | 2.9(அ)(ii) |
| 128(2)எ | சம்பந்தப்பட்ட பற்பல திணைக்களங்களிலிருந்து தேவைப்படும் அத்தகைய தகவலைப் பெறுவதன்மூலம் பொருத்தமான அரசிறை தலைப்புகளின்கீழ் சேகரிக்கப்படும் பணத் தொகை தொடர்பான பதிவுகள் பேணப்பட்டு, அந்தந்த வருமானக் குறியீட்டின்கீழ் திரட்டப்படும் அரசிறை தொடர்பாக திறைசேரியில் அவற்றுக்குரிய கணக்குகளுடன் குறித்த பதிவுகள் இணங்கச் செய்யப்படுகின்றன எனவும். | திறைசேரி கணினி அச்சீட்டில் எண்களை அடிப்படையாகக்கொண்டு வருமானக் கணக்கு தயாரித்திருத்தல் | 2.9.(அ)(i) மற்றும் (ஆ) (i) |

## 2. போதியளவிலானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 2.1 செயலாற்றுகை

**திட்டமிடல்**

திணைக்களத்தின்கீழ் வருடாந்தம் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்த வேண்டிய ஈ - சனத்தொகை ஆவண நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஈ - பிறப்பு, விவாகம் மற்றும் இறப்பு நிகழ்ச்சித்திட்டம் மீளாய்விற்கான ஆண்டில் செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை.

### 2.2 கடமைகளை நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) எதிர் பார்க்கப்பட்ட விளைவளவு மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை**

மீளாய்விற்கான ஆண்டில் உரித்துகள் பதிவாளர் அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்த 60,134 உரித்துகள் அட்டவணைகளில் ஆண்டு இறுதியாகும்போது, 43,202 ஆவணங்கள் பதிவு செய்வதற்கு முடியாது போயிருந்ததுடன், ஆண்டுக்குள் பதிவு செய்யப்பட்ட 49,697 அட்டவணைகளில் 32,765 அட்டவணைகள் முன்னரான ஆண்டில் கிடைக்கப்பெற்ற அட்டவணைகளாகும்.

**(ஆ)** 2014 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதிய 1864/44 ஆம் இலக்க வர்த்தமானிமூலம் பிரசுரிக்கப்பட்ட 2006 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல் சட்டத்தில் 2 மற்றும் 11 ஆம் பிரிவுகள் பிரகாரம் 2012 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆந் திகதி தொடக்கம் வலுவிலிருக்கும் வகையில் பிறப்பு மற்றும் இறப்புகளுக்கு ஏற்புயைடதான தரவுகளை இலத்திரனியல் முறையில் கோவையிடல், தயாரித்தல், பாதுகாப்பாக பேணுதல் மற்றும் வழங்கப்படல் வேண்டுமாயினும், 2012 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆந் திகதி தொடக்கம் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 அந் திகதி வரையிலான காலப் பகுதியில் நிகழ்ந்துள்ள 1,891,372 பிறப்புகளில் 1,316,100 பிறப்புகளும், 716,181 இறப்புகளில் 445,749 இறப்புகளும் இந்த தகவல் முறைமையில் உள்ளடக்குவதற்கும், அதனைச் சார்ந்து சான்றிதழ் பிரதிகளை வழங்குவதற்கும் இயலாதிருந்தமை காணப்பட்டது.

**(இ)** ஈ - பிறப்பு, விவாகம் மற்றும் இறப்பு நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் 1960 ஆம் ஆண்டு தொடக்கம் பிறப்பு, விவாகம் மற்றும் இறப்பு சான்றிதழ்களை ஊடுகதிர்ப் படமெடுக்கும் நடவடிக்கைகள் 2009 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஆயினும், 1960 – 1990 காலப்பகுதிக்குரிய தகவல்கள் திணைக்களத்திடம் இல்லாதிருந்ததுடன், 1991 – 2011 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நிகழ்ந்துள்ள 14,339,280 பிறப்பு, விவாகம் மற்றும் இறப்புகளும், 2012 – 2017 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நிகழ்ந்துள்ள 3,921,020 பிறப்பு, விவாகம் மற்றும் இறப்புகளில், 1,438,285 அல்லது நூற்றுக்கு 36 ஐ ஊடுகதிர்ப் படமெடுத்தல் மேற்கொள்ளப்படவில்லை. எவ்வாறாயினும், சம்பந்தப்பட்ட சான்றிதழ்களை 04 மாவட்டங்களில், அந்த மாவட்டங்களில் உள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ள முடியுமாயினும், எஞ்சிய 21 மாவட்டங்களிலும் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களில் மட்டுமே சான்றிதழ்களை பெற்றுக்கொள்ள முடியும்.

**(ஈ)** ஐக்கிய நாடுகளின் அமைப்பினால் அறிமுகப்படுத்தியுள்ள நிலைபேறுடன்கூடிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030" இற்கு ஒழுங்கமைவாக பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டுள்ள 2017 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க இலங்கை நிலைபேறுடன்கூடிய அபிவிருத்தி சட்டம் மற்றும் அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபங்கள் பிரகாரம் அரச நிறுவனங்களால் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் நிலைபேறுடனான அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்த வேண்டுமாயினும், திணைக்களம் அது தொடர்பாக அறிந்திருக்காமையால் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடையாளம் காணப்பட்டு செயற்றிட்டம் தயாரித்தல், தேவையான மனித மற்றும் பௌதீக வளங்கள் என்பவற்றை அடையாளம் காணுதல், ஒதுக்கீடுகளை ஒதுக்கிக் கொள்ளுதல், அந்த நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்காக சுட்டிகளை தயாரித்தல், அது தொடர்பாக முயற்சியுள்ள தரப்புகளை அடையாளம் காணுதல், அறிவுறுத்தல் ஆகிய வகையில் நிலைபேறுடனான இலக்குகளை எய்து கொள்வதற்காக எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்கவில்லை.

**2.3 பெறுகை நடவடிக்கை செயன்முறைமூலம் வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளுதல்**

-----------------------------------------------------------------------------------------------------

திணைக்களத்தால் அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல்கோவைபடி பணியாற்றி வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக 163.35 மில்லியன் ரூபாவிலான ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், அதில் 153.63 மில்லியன் ரூபாவிலான ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையில் 9.72 மில்லியன் ரூபா அல்லது ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளிலிருந்து 5.95 ஆன ஒதுக்கீடு எஞ்சியிருந்தது.

**2.3.1 பெறுகைகளை திட்டமிடல்**

**--------------------------------**

பினவரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுகை நடவடிக்கையினை திட்டமிடல் மற்றும் ஆரம்ப சந்தர்ப்பம்

--------------------------------------------------------------------------------

இந்த படிநிலையின்கீழ் பின்வரும் திட்டங்கள் மற்றும் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) பிரதான திட்டமிடல் திட்டம் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலத்திற்காக இற்றைப்படுத்தல்

**(ii)** பெறுகை பெகேஜ் சாராம்சம்.

(ஆ) பூர்வாங்க உடன்படிக்கை கட்டம்

--------------------------------------

இந்த கட்டத்தின்கீழ் பின்வரும் திட்டங்களையும் ஆவணங்களையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) ஒவ்வொரு ஒப்பந்த பெகேஜ்களின் பொருட்டு பெறுகை கால அட்டவணை.

(ii) வேலைகள், பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றுக்கு விரிவான பெறுகை திட்டம்

**2.3.2 பெறுகை நடைமுறையினை செயற்படுத்தல்**

**---------------------------------------------------**

திணைக்களத்தின் கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு தேவையான வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்கையில், பின் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல் கோவையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைவாகயின்றி கொள்வனவுகளின் பொருட்டு செலுத்தல்கள் மேற்கொண்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டது.

(அ) 2017 ஆம் ஆண்டின் திட்டங்களை தயாரிக்கும்போது, முதன்மை வழங்க வேண்டிய அலுவல்களாக சனவரி – நவம்பர் காலப்பகுதியில் கணினிகளை கொள்வனவு செய்தல் வேண்டுமென குறிப்பிடப்பட்டிருப்பினும், நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொண்டு 4,753,575 ரூபா பெறுமதியான 40 கணினிகளை கொள்வனவு செய்திருந்தமையால், சிறந்த முகாமைத்துவ திட்டமிடலின்கீழ் மேற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்தின் நிழற்பட பிரதி சேவை, துப்பரவேற்பாட்டு சேவை. மற்றும் பாதுகாப்பு சேவை என்பவற்றுக்காக மீளாய்விற்கான ஆண்டில் செலவு ரூபா 122,521,261 ஆனதுடன், குறித்த பெறுகை நடவடிக்கைகளின்போது, பின்வரும் வகையில் 2006 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதான பெறுகை வழிகாட்டல் கோவைக்கு புறம்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(i) 2006 ஆம் ஆண்டில் அரசாங்க பெறுகை வழிகாட்டல் கோவைக்கான 2014 ஆம் ஆண்டு யூலை 04 ஆந் திகதிய பிற்சேர்ப்பு இலக்கம் 28 இல் 2.14.1 வழிகாட்டலகோவை பிரகாரம் மொத்த செலவு மதிப்பீடு தயாரிக்காது பெறுகை குழு மொத்த செலவினை தீர்மானித்தல்

**(ii)** நிழற்பட பிரதி சேவை மற்றும் பாதுகாப்பு சேவை என்பவற்றின் பெறுகை நடவடிக்கைகளில் 5.3.13 மற்றும் 6.2.2 வழிகாட்டல் கோவைக்கு புறம்பாக

மொத்தம் ரூபா. 1,165,000 ஆன விலைகளின் பிணைப் பொறுப்பு குறைவாக பெற்றுக்கொண்டிருத்தல் மற்றும் தேசிய போட்டியுடன்கூடிய விலைகேள்விக்காக ஆகக்குறைந்த காலவெல்லையான 21 நாட்களை வழங்காதிருத்தல்.

**2.4 சொத்துக்களின் முகாமைத்துவம்**

**வாகனங்களின் உபயோகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் திணைக்களத்திற்குரியதாக 23 வாகனங்கள் இருந்ததுடன், அந்த வாகனங்களில் ஓட்டக் குறிப்புகளை சமர்ப்பிக்காமை காரணமாக ஓடிய தூரம் தொடர்பான தகவலை கண்டறிய முடியவில்லை. அந்த வாகனங்களில் எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் பொருட்டு ரூபா. 2,726,629 ம், வாகனங்களை சர்விஸ் செய்வதற்காக ரூபா. 807,854 ம், வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக ரூபா 2,757,969 ம், வானங்களின் காப்புறுதி பொருட்டு ரூபா. 1,011,495 ம், என்ற வகையில் ரூபா. 7,303,947 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டு திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை பிரகாரம் எரிபொருள் செலவழிவை பரிசோதனை செய்திருக்கவில்லை.

**2.5 பாரப்படுத்தல்களும் பொறுப்புகளும்**

**இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்டுகின்றன.**

(அ) 2017 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையில் 02(அ) பந்திக்கு ஒழுங்கமையாது 12 செலவு வியடங்களுக்கு 593.691 மில்லியன் ரூபாவிலான ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆயினும் அவ்வொதுக்கீடுகளை 11.037 மில்லியன் ரூபாவால் விஞ்சி 16.264 மில்லியன் ரூபாவிலான பொறுப்புகளை ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்திருந்தபோதிலும் கட்டுநிதி கிடைக்கப்பெறாமையால் செலுத்தவதற்கு முடியாதுபோன 153 என்ற செலவு வியடத்தின்கீழ் 6.57 மில்லியன் ரூபாவிலான பொறுப்புகள், 254 இலக்க செலவு விடயத்தின்கீழ் செலுத்தப்பட வேண்டிய தரப்புகள் மற்றும் செலுத்துவதற்கு விபரங்களின்றி 13.76 மில்லியன் ரூபாவிலான பொறுப்புகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன.

(இ) 2018 ஆம் ஆண்டில் மீளாய்விற்கான ஆண்டுக்காக செலுத்தியிருந்த 501,057 ரூபாவிலான பொறுப்புகள் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

## 2.6 தீர்க்கப்படாதிருந்த கணக்காய்வு பந்திகள்

திணைக்களத்திற்கு ஏற்புடையதாக கணக்காய்வாளர் அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கியிருந்த கணக்காய்வு பந்திகளில் சுட்டிக்காட்டிய குறைப்பாடுகள் தொடர்பில், திணைக்களத்தால் சரி செய்யப்படாத பந்திகளின் தொடர்புகள் பின்வருமாறாகும்.

| | கணக்கயாவ்ளார் அதிபதி அறிக்கைக்கு தொடர் இலக்கம் ஆண்டு | பந்தி இலக்கம் | தொடர்புடைய விடயம் |
|---|---|---|---|
| (அ) | 2015<br>2016 | 3.1 (அ)<br>3.1 (அ) | 1978 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க 842 மற்றும் நிதி ஒழுங்குவிதி 502(2) பிரகாரம் காணி, கட்டிடங்கள், தளவாடங்கள், அலுவலக உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களுக்கான நிலையான சொத்துக்களின் பதிவேடை தேவையான தகவல்கள் அடங்கலாக இற்றைப்படுத்தப்படாமை |
| (ஆ) | 2015<br>2016 | 3.1 (ஈ)<br>3.1 (இ) | நிதி ஒழுங்குவிதி 880 மற்றும் 891 (1) பிரகாரம் பிணை வைக்க வேண்டிய அலுவலர்கள் மற்றும் ஊழியர்களிடமிருந்து பிணைப்பணம் பெற்றுக்கொண்டு பதிவேடை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை |
| (இ) | 2015<br>2016 | 3.1 (உ)<br>3.1 (ஈ) | நிதி ஒழுங்குவிதி 1647 (இ) பிரகாரம் எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் இருப்பு புத்தகங்களை பேணிச் செல்லாமை |
| (ஈ) | 2016 | 3.1 (உ) | நிதி ஒழுங்குவிதி 1647 (இ) பிரகாரம் வாகன அட்டவணைப் படுத்தல் பதிவேடை பேணிச் செல்லாமை |
| (இ) | 2015<br>2016 | 3.6.2<br>3.10 (ஆ) | 04 பணியாற்றொகுதியைக் கொண்ட உள்ளக கணக்காய்வு பிரிவினை தாபிக்கப்பட்டிருப்பினும், நிதி ஒழுங்குவிதி 133 பிரகாரம் உள்ளக கணக்காய்வாளரை நியமனம் செய்யப்படாமை |
| (ஈ) | 2015<br>2016 | 3.6.4<br>3.10 (இ) | இரண்டு மாதங்களுக்கு ஒன்று என்ற வகையில் 06 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்களை நடாத்தப்பட வேண்டுமாயினும், ஒரு கூட்டம் மட்டும் நடாத்தப்பட்டிருந்ததுடன், முன்னரான ஆண்டுகளிலும் அதே நிலை காணப்பட்டமை |
| (எ) | 2016 | 3.9 | பானந்துரை காணி பதிவாளர் அலுவலகத்தில் 2013 ஆம் ஆண்டில் நிகழ்ந்துள்ளதாக அறிய வந்துள்ள ஏட்டோலைகள் வழங்கியதற்கு ஏற்புடையதான நிதி முறைகேடு தொடர்பாக, நிதி ஒழுங்குவிதி 104 பிரகாரம் விசாரணை நடாத்தி ஏற்புடைய நட்டங்களை கணிப்பிடப்பட்டு அறிவிடுவதற்கும், ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளாது, அதற்கு பொறுப்பு கூற வேண்டியவர் என்று அடையாளம் காணப்பட்ட அலுவலரை வேறு அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தது. |

## 2.7 முகாமைத்துவ குறைப்பாடுகள்

மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளில் பின்வரும் குறைப்பாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கொழும்பு காணி பதிவாளர் அலுவலகத்தின் நடவடிக்கைகளையும், திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால், மாரவில, பதுளை, நீர்கொழும்பு, அநுராதபுரம், ஹொரணை, மன்னார் மற்றும் கொட்டபொல ஆகிய காணி பதிவாளர் அலுவலகங்களில் மேற்கொண்ட பரிசோதனை நடவடிக்கைகளையும், பதிவாளர் நாயகத்தின் கையேட்டுடன் மாதிரியாக பரிசோதனை செய்கையில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நொத்தாரிசுகளால் எழுதி கையொப்பமிட்ட உறுதிகளில் இரண்டாவது பிரதிகளை அடுத்து வரும் மாதத்தில் 15 ஆம் திகதிக்கு முன்னராக சம்பந்தப்பட்ட காணி பதிவாளரிடம் கையளிக்கப்பட வேண்டுமாயினும், 05 காணி பதிவாளர் அலுவலகங்களில் 18 நொத்தாரிசுகளால் 2008-2017 ஆம் ஆண்டுகளுக்கு ஏற்புடையதாக 446 இரண்டாவது பிரதிகளை கையளிக்கப்படாமையும், 06 காணி பதிவாளர் அலுவலகங்களில் 65 நொத்தாரிசுகளால் உறுதிகளின் இரண்டாவது பிரதிகளை தாமதப்படுத்தி கையளித்திருத்தமையும் தொடர்பில் முறைகேடு அறிக்கைகள் தாயரித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை.

(ii) உறுதிகளின் இரண்டாவது பிரதிகள் கிடைக்கப்பெற்ற திகதியிலயே ஒழுங்குமுறையில் நொத்தாரிசு பரிசோதனை புத்தகத்தில் உள்ளடக்கப்பட வேண்டுமாயினும், அந்த நடவடிக்கைகளை பெரும்பாலும் தாமதப்படுத்தியிருத்தல் மற்றும் ஆவணங்களை இற்றைப்படுத்தப்படாமை காரணமாக முறைகேடுகளை வழங்குவதற்கும், நடுத்தீர்ப்பு, நிலுவை மற்றும் அபராதங்களை அறவிடுவதற்கும் இயலாதிருந்தது. மேலும் கொழும்பு காணி பதிவாளர் அலுவலகத்தில் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் பரிசோதனை செய்வதற்கு முடியாதுபோன இரண்டாவது பிரதிகளின் எண்ணிக்கை 2016 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற 59,876 ம் அடங்கலாக 145,664 ஆகும்.

(iii) கொழும்பு காணி பதிவாளர் அலுவலகத்தில் 70 நொத்தாரிசுகளால் தாம் ஆற்றிய வேலைகள் தொடர்பாக வார அறிக்கைகளை வழங்காமையால் முறைகேடுகளை அடையாளம் காணுவதற்கு இயலாதிருந்தது.

(ஆ) மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் ஈ - லாண்ட் கருத்திட்டம்மூலம் 81.23 மில்லியன் ரூபா செலவில் 15 காணி பதிவாளர் அலுவலகங்களில் 9,635,348 காணிகளுக்கான ஏட்டோலைகள் ஊடுகதிரப் படமெடுத்திருப்பினும், கணினி முறைமையில் உள்ள குறைப்பாடுகள் காரணமாக பொது மக்களிடம் ஊடுகதிர்ப் படமெடுக்கப்பட்ட தரவுகள் சார்ந்து சான்றிதழ் பிரதிகளை வழங்க முடியவில்லை. மேலும், 30 காணி பதிவாளர் அலுவலகங்களில் 16 மில்லியனுக்கும் அதிகமான காணி ஆவணங்கள் ஊடுகதிர்ப் படமெடுப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது.

(இ) திணைக்களத்தின் வாகனங்களின் லொக் புத்தகங்களில் வாகனங்கள் தொடர்பான விபரங்கள், வருடாந்த அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளுதல், டயர் மாற்றுதல்கள், பழுதுபார்த்தல்கள் மற்றும் சர்விஸ் செய்தல் போன்ற தகவல்கள் உள்ளடக்கி இற்றைப்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) மத்திய ஆவணக்கூடம் மற்றும் 27 காணி பதிவாளர் அலுவலகங்கள் மீளாய்விற்கான ஆண்டில் வெளித்தரப்புகள்ஊடாக நிழற்பட பிரதிகளின் சேவைகளை பெற்றுக்கொள்ளும் செலவு ரூபா. 56,592,603 ஆனதுடன், அது வருடாந்தம் தொடர்ச்சியாக மேற்கொள்கின்ற செலவாகியது. வெளியக தரப்புகள்மூலம் இந்த சேவையினை பெற்றுக்கொள்ளுதலானது, திணைக்களத்தின்ஊடாக இச் சேவை

பெற்றுக்கொள்வதிலும் பார்க்க நன்மை பயக்குமா என்பது தொடர்பாக சாத்தியவள ஆய்வினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஓ) திணைக்களத்திற்குரிய நாடு பூராகவும் உள்ள 53 அலுவலகங்களுக்கு துப்பரவேற்பாட்டு சேவைகளை வழங்குவதற்கு 16 வேலை பரிசோதகர்கள் மட்டும் உள்ளடங்கும் வகையில் விலை கேள்விகளை மேற்கொண்டு கடமைகளை கையளிக்கப்பட்டுள்ளதால், திணைக்களத்தின் அலுவலகங்களில் துப்பரவேற்பாட்டு நடவடிக்கைகள் உரியவாறு மேற்கொள்ளப்படுவதாக அவதானிக்கப்படவில்லை.

## 2.8 கடமைப் பொறுப்புகள் நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளை உபயோகப்படுத்தல்

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் 05 ஆண்டு காலப் பகுதியில் திணைக்களத்திற்கு ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடு, உபயோகம் மற்றும் மீதி தொடர்பான தகவல்களும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகளும் பின்வருமாறாகும்.

| ஆண்டு | செலவு வகை | தேறிய ஒதுக்கீடு | உபயோகம் | மீதி | மீதி தேறிய ஒதுக்கீட்டில் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | **ரூபா.மில்லியன்** | **ரூபா.மில்லியன்** | **ரூபா.மில்லியன்** | |
| 2013 | மீண்டுவரும் | 788.649 | 785,469 | 3.180 | 0.4 |
| | மூலதன | 64.850 | 49,663 | 15.187 | 23.40 |
| | **மொத்தம்** | **853.499** | **835,132** | **18.367** | **2.20** |
| 2014 | மீண்டுவரும் | 1,041.100 | 1,015,454 | 25.646 | 2,46 |
| | மூலதன | 53.100 | 47,430 | 5.670 | 10.68 |
| | **மொத்தம்** | **1,094.200** | **1,062,884** | **31.316** | **2.86** |
| 2015 | மீண்டுவரும் | 1,261.200 | 1,217,420 | 43.780 | 3.46 |
| | மூலதன | 64.000 | 54,593 | 9.407 | 14.69 |
| | **மொத்தம்** | **1,325.200** | **1,272,013** | **53.187** | **4** |
| 2016 | மீண்டுவரும் | 1,341.400 | 1,324,982 | 16.418 | 1.22 |
| | மூலதன | 113.600 | 101,286 | 12.314 | 10.83 |
| | **மொத்தம்** | **1,455.000** | **1,426,268** | **28.732** | **1.97** |
| 2017 | மீண்டுவரும் | 1,342.020 | 1,330,650 | 11.370 | 0.84 |
| | மூலதன | 76.000 | 46,273 | 29.727 | 39.11 |
| | **மொத்தம்** | **1,418.020** | **1,376,923** | **41.097** | **2.89** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**ஒதுக்கீட்டுக் கணக்கு**

(அ) நிதி ஒழுங்குவிதி 66 பிரகாரம் 07 செலவு விடயங்களின் பொருட்டு 7.14 மில்லியன் ரூபா மாற்றப்பட்டிருந்ததுடன், மிகை ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்திருந்த மேலும் 09 விடயங்களை ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றுதலானது 7.8 மில்லியன் ரூபாவாகியது.

(ஆ) வெளிநாட்டு பிரயாணங்களின் செலவு விடயங்களுக்கு ஏற்பாடு செய்திருந்த ரூபா. 500,000 ஆன மொத்த ஒதுக்கீட்டு தொகை நிதி ஒழுங்குவிதி 66 பிரகாரம் மாற்றப்பட்டிருந்ததுடன், மேலும் 02 செலவு விடயங்களின் பொருட்டு ஏற்பாடு செய்திருந்த 07 மில்லியன் ஒதுக்கீடு எஞ்சியிருந்தது.

(இ) மிகை ஒதுக்கீடு எற்பாடு செய்திருந்தமை காணரமாக 07 செலவு விடயங்களில் 11.0 மில்லியன் ரூபாவிலான தேறிய ஒதுக்கீடுகளிலிருந்து, 4.3 மில்லியன் ரூபா எஞ்சியிருந்தமை நூற்றுக்கு 18 தொடக்கம் நூற்றுக்கு 85 வரையிலான எல்லையைக் கொண்டிருந்தது.

(ஈ) காப்புறுதி செய்யப்படாத லொறி வண்டி விபத்துக்குள்ளாகியதன் காணரமாக ஏற்பட்டிருந்த ரூபா. 433,649 ஆன நட்டம் ரூபா. 162,617 ஆக ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்டிருந்ததுடன், பதிவழிப்பதற்கு அனுமதி கிடைக்கப்பெற்றிருந்த ரூபா. 271,029 தொகை ஒதுக்கீட்டுக் கணக்கில் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கும் கூற்றுமூலம் வெளிப்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் வாகனங்கள், தளவாடங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் என்பன ஒதுக்கீட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்டிருந்த மீதி தொகையிலும் பார்க்க திறைசேரி கணினி அச்சீட்டு குறிப்பில் மீதி தொகை ரூபா. 245.5 குறைவாக காட்டப்பட்டிருந்ததுடன், ஒதுக்கீட்டுக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்த 375.2 மில்லியன் ரூபாவிலான கட்டிடங்கள் மற்றும் நிருமாணிப்புகளும், 1,498.4 மில்லியன் ரூபாவிலான காணி மற்றும் காணி மேம்படுத்தல்களும் திறைசேரியால் கணினி அச்சீட்டு குறிப்பில் உள்ளடக்கப்படவில்லை.

(ஈ) திணைக்களத்திடம் சட்டரீதியாக உரிமை கையேற்கப்படாமல் நிலையான சொத்துக்களின் பதிவேட்டில் உள்ளடக்கிய 18 காணி மற்றம் கட்டிட சொத்துக்களில் பெறுமதி ரூபா. 719,570,000 ம், கட்டிடங்கள் மற்றும் நிருமாணிப்புகளின் பெறுமதி ரூபா. 106,806,356 ம் என்ற வகையில் ஒதுக்கீட்டு கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது. மேலும் 11 சொத்துக்களில் காணி மற்றும் காணி மேம்படுத்தல்களின் பெறுமதி ரூபா. 741,252,851 ம், கட்டிடங்கள் மற்றும் நிருமாணிப்புகளின் பெறுமதி ரூபா. 264,960,683 ம் என்ற வகையில் ஒதுக்கீட்டு கணக்கில் உள்ளடக்கியிருந்த போதிலும், நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்படவில்லையென்பதுடன், அதில் 10 சொத்துக்களின் உரித்துகளை திணைக்களத்திற்கு உரியதென உறுதிப்படுத்தப்படவில்லை.

(உ) உரித்துகளை பதிவு செய்யும் கடமைப் பொறுப்புகளின் பொருட்டு காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு (தலைப்புகள் 153) செலவு தலைப்பில் 28.5 மில்லியன் ரூபாவிலான ஒதுக்கீடு திணைக்களத்திடம் வழங்கியிருந்ததுடன், அந்த ஒதுக்கீடுகளில் 13.6 மில்லியன் ரூபா அல்லது நூற்றுக்கு 48 அளவு மட்டும் உபயோகப்படுத்தப்பட்டிருந்தது.

## 2.9 மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானம்

-------------------------------------------------------------------

திணைக்களத்தால் 2017 ஆம் ஆண்டுக்கு வருமான குறியீடு 02 இன்கீழ் மொத்தம் 1,320 மில்லியன் ரூபாவிலான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்விற்கான ஆண்டில் மொத்தம் 1,297.4 மில்லியன் ரூபாவிலான வருமானம் சேர்க்கப்பட்டிருந்தது.

**(அ) 10: 03: 07: 00 ஆம் இலக்க வருமான குறியீடு – பதிவு செய்தல் கட்டணங்களின் வருமானம்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(vi) திணைக்களத்தால் நாட்டில் காணி பதிவாளர் அலுவலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் என்பவற்றில் தகவல்களை பெற்றுக்கொள்ளாது 1,100 மில்லியன் ரூபாவாக தயாரிக்கப்பட்டிருந்த அடிப்படை வருமான மதிப்பீடு, பொது திறைசேரியால் 1,400 மில்லியன் ரூபா என்ற வகையில் வருடாந்த மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டு பின்னர் அதனை 1,300 மில்லியன் ரூபாவாக திருத்தம் செய்யப்பட்டிருந்தது.

(vii) மீளாய்விற்கான ஆண்டில் நிலுவை வருமானம் 21.83 மில்லியன் ரூபாவில் அறவிடல், 5.17 மில்லியன் ரூபாவாகியதால் 2017 ஆம் அண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் நிலுவை வருமானம் 16.66 மில்லியன் ரூபாவாகும். இந்த நிலுவை வருமானம் 01 ஆண்டு தொடக்கம் 03 ஆண்டுகளுக்கு அதிகமான காலவெல்லைக்கு ஏற்புயைடதாக இருந்தது. மேலும், காணி பதிவாளர் அலுவலகங்களில் நிலுவை வருமானங்களின் மீதி தொகையிலும் பார்க்க, பிரதான அலுவலகத்தின் அறிக்கைகளில் நிலுவை வருமானங்களின் மீதி 7.13 மில்லியன் ரூபாவிலான வேறுபாடு காணப்படினும், பிரதான அலுவலகத்தின் நிலுவை வருமானத்தின் மீதி கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(viii) கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்விற்கான ஆண்டில் உண்மையான வருமானம் 42 மில்லியன் ரூபாவால் அதிகரிக்கப்பட்டிருந்தது. பொது மக்களால் காணி பதிவேடுகளிலும், பிறப்பு, விவாகம் மற்றும் இறப்பு சான்றிதழ்களிலும் பிரதிகள் பெற்றுக்கொள்ளுதல் அதிகரித்தமையால் குறித்த அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

(ix) காணி பதிவாளர் அலுவலகங்களில் மற்றும் பிரதேச செயலகங்களில் உரியவாறு மாதாந்த வருமான அறிக்கைகளை பெற்றுக்கொண்டு திரட்டிய வருமானத்துடன் ஒப்பிடப்படாமை

**(ஆ) 10:03:08:00 ஆம் இலக்க வருமான குறியீடு -நொத்தாரிகளுக்கு வருடாந்த மேல் நீதிமன்ற சான்றிதழ் வழங்கும் கட்டணங்களின் வருமானம்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கடந்த ஆண்டில் உழைக்கப்பட்ட 15.9 மில்லியன் ரூபாவிலான வருமானம் தொடர்பாக கவனம் செலுத்தப்படாது, பொது திறைசேரியால் மீளாய்விற்கான ஆண்டின் வருமானம் 24 மில்லியன் ரூபாவாக எதிர்வு கூறப்பட்டு வருடாந்த மதிப்பீட்டில் உள்ளடக்கிய பின்னர், 20 மில்லியன் ரூபாவாக திருத்தம் செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்விற்கான ஆண்டில் உழைக்கப்பட்ட வருமானம் 15.4 மில்லியன் ரூபாவாகியதால் 4.6 மில்லியன் ரூபா என்ற உண்மையான வருமானத்தை அடைந்துகொள்வதற்கு இயலாதிருந்தது.

(ii) 2016 ஆம் ஆண்டிலும் மீளாய்விற்கான ஆண்டிலும் காணி பதவாளர் அலுவலகங்களில் நொத்தாரிசு பெயர் அட்டவணைகளை இற்றைப்படுத்தி பேணிச் சென்று, அந்தந்த நீதிமன்ற வலயங்களின்கீழ் பதிவு செய்துள்ள நொத்தாரிசுகள் தொடர்பாக பிரசூரிக்கப்படவில்லை. வருடாந்த சான்றிதழ் பெற்றுக்கொள்ளாது நொத்தாரிசு கடமையில் ஈடுபடுகின்ற நொத்தாரிசுகள் தொடர்பாக கண்டறியப்படவில்லையென்பதுடன், கொழும்பு காணி பதிவாளர் அலுவலகத்தில் 735 நொத்தாரிசுகள் வருடாந்தம் சான்றிதழ்களை புதுபித்துக்கொண்டிருந்தார்கள்

(iii) நொத்தாரிசுகளை புதிதாக பதிவுசெய்தல் கட்டணம் 2000 ம் ரூபா மற்றும் புதுப்பிக்கும் கட்டணம் ரூபா 1000 ம் ஆவதால் திரட்டிய மொத்த தேறிய வருமானத்தின் இறுதி இலக்கங்கள் “000” ஆக வேண்டுமாயினும், மீளாய்விற்கான ஆண்டில் திரட்டிய வருமானம் ரூபா. 15,399,561 ஆகியதால் செவ்வைத் தன்மையை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு முடியவில்லை.

(iv) மேல் நீதிமன்ற வலயங்கள் 09 இன், மொத்தம் 25 மாதங்களில் வருமான அறிக்கைகளை பெற்றுக்கொண்டு திரட்டிய வருமானத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படவில்லை.

(இ) மீளாய்விற்கான ஆண்டில் திரட்டியிருந்த 23.13 மில்லியன் ரூபாவிலான உரித்துகளின் வருமானம், உரித்துகளின் பதிவாளர் அலுவலகங்களின் வருமான அறிக்கைகள் மற்றும் வங்கி வைப்பு பத்திரங்களுடன் ஒப்பிட்டு பார்க்காமையும், வங்கியில் வரவு வைக்கப்பட்ட 1.08 மில்லியன் ரூபாவை அடையாளம் காணப்படாமையும், உரித்துகள் பதிவாளர்களால் கணக்கில் வரவு வைக்கப்பட்ட வருமானம் மற்றும் அவர்களின் வருமான அறிக்கைகளுக்கிடையில் வேறுபாடுகள் இருந்தமை காணரமாகவும் சேகரிக்கப்பட்ட வருமானத்தில் திரட்டிய நிதியத்திற்கு நூற்றுக்கு 60 ம், உரித்துகளின் பாதுகாப்பு நிதியத்திற்கு நூற்றுக்கு 40 ம் மாற்றியதற்கான செவ்வைத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியவில்லை.

## 2.10 அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

திணைக்களத்திற்கு ஏற்புடையதாக விடய இலக்கம் 25401 என்ற அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கின் பொருட்டு பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகளும் உண்யைமான பெறுமதிகளும் பின்வருமாறாகும்.

| செலவு | | கிடைக்கப் பெறுதல் | பற்று மீதி | | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உண்மையான | ஆகக் குறைந்த எல்லை | உண்மையான-- | ஆகக் கூடிய எல்லை | உண்மையான |
| ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் |
| 80.00 | 79.99 | 50.00 | 57.29 | 230.00 | 203.34 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலுவை கடன் மீதிகளை அறவிடப்படாமை

கணக்காய்வில் சமர்ப்பித்த கணக்கிணக்கக் கூற்று பிரகாரம் 77 அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவையாக இருந்த கடன் மீதிகளின் மொத்தம் ரூபா.2.41 மில்லியன் ரூபாவானதுடன், குறித்த நிலுவை மீதி 01 மாதம் 27 ஆண்டுகள் வரையிலான காலவெல்லைக்குள் இருந்து தொடர்கின்றது. அந்த நிலுவை மீதிகளை அறிவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) ஆகக்கூடிய பற்று எல்லை

---

இடமாற்றம் பெற்று வந்திருந்த அலுவலர்களிடத்தில் ரூபா. 992,427 ஆன கடன்மீதி சீராக்குவதற்கு ஏற்புடையதாக நாட்குறிப்பேட்டில் குறிப்புகளை வைக்கும்போது ஏற்பட்ட பிழையினை திணைக்களத்து புத்தகங்களில் செவ்வைபடுத்தியிருப்பினும், திறைசேரி புத்தகங்களில் செவ்வையாக்கப்படாமையால் மீளாய்விற்கான ஆண்டில் ரூபா. 80,000,000 ஆன ஆகக்கூடிய செலவு எல்லை ரூபா. 989,927 ஐ விஞ்சி ரூபா. 80,989,927 என்ற வகையில் திறைசேரி கணினி குறிப்புகளில் காட்டப்படினும், திணைக்களத்தின் புத்தகங்களின்படி உண்மையான செலவு ரூபா. 79,997,500 ஆகியது.

**2.11 கட்டு நிதி கணக்கு**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாத வங்கி கணக்கிணக்க கூற்றின்படி வழங்கியபோதும் சமர்ப்பிக்கப்படாத ரூபா.153,710 ஆன காசோலை இருத்தல், வங்கியில் நேரடியாக வரவு வைத்தல் ரூபா.104,138 ஐ அடையாளம் காணப்பட்டு கணக்கில் வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாதிருத்தல், வைப்பிலிடப்பட்ட போதும் காசாக்கப்படாத வைப்புகள் ரூபா.9,225 ஐ சீராக்கப்படாதிருத்தல் போன்ற விடயங்கள் காரணமாக பொது திறைசேரியிடம் கட்டுநிதி தீர்க்கப்பட்டு செவ்வையானதென உறுதிப்படுத்த முடியாதிருத்தல்.

**2.12 ஏற்புடையாமை**

---

**2.12.1 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு ஏற்புடையாமை**

---

2016 அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல் கோவையில் 5.4.2 வழிகாட்டல் பிரகாரம் திணைக்களத்தின் 03 சேவைகளுக்கு எற்புடையதாக 4 வழங்குநர்களிடம் செலுத்தியிருந்த வெட் வரி ரூபா. 14,645,248 ஆன பெறுமதி தொடர்பாக, மாதாந்த அறிக்கைகளை கணக்காய்வாளர் அதிபதிக்கு பிரதிகள் சகிதம், உள்நாட்டு இறைவரி ஆணையாளரிடம் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாதிருத்தல்

**2.13 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

---

2016 ஆம் ஆண்டு சனவரி 28 ஆந் திகதிய DMA/2009(I)(i) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை பிரகாரம் திணைக்களத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவால் கணக்காய்வாளர் அதிபதி அறிக்கைகள் மீளாய்வு செய்து ஏற்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், செயலாற்றுகை இலக்குகள் எய்துக்கொள்ளுதலை மதிப்பிடுதல், வளங்களின் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தியினை மீளாய்வு செய்தல், குழுவின் செயலாற்றுகையை வருடாந்தம் அறிக்கையில் உள்ளடக்குதல், வருடாந்த பெறுகை திட்டம் மற்றும் செயலாற்றுகை திட்டம் புலனாய்வு செய்தல் ஆகிய விடயங்களை கலந்துரையாடப்படவில்லை.

## 2.14 மனித வளங்களின் முகாமைத்துவம்

### 2.14.1 இணைக்கப்பட்ட பணியாற்றொகுதி, உண்மையான பணியாற்றொகுதி மற்றும் ஆளுக்குரிய வேதனாதிகளுக்கான செலவு பின் குறிப்பிடப்பட்டுள்ளது.

பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட, உண்மையான மற்றும் வெற்றிடப் பணிற்றொகுதி தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும். மீளாய்விற்கான ஆண்டின் பொருட்டு திணைக்களத்தால் ஆளுக்குரிய வேதனாதிகளின் செலவு தொகுதியின் பொருட்டு 133.08 மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருந்தது.

| | பணியாற்றொகுதி | அங்கீகரிக்கப்ட்ட பணியாற்றொகுதி | உண்மையான பணியாற்றொகுதி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேட்ட மட்டம் | 41 | 16 | 25 |
| (ii) | மூன்றாம் நிலை மட்டம் | 588 | 522 | 66 |
| (iii) | இரண்டாம் நிலை மட்டம் | 1,569 | 1,301 | 268 |
| (iv) | ஆரம்ப நிலை மட்டம் | 464 | 400 | 64 |
| | மொத்தம் | 2,662 | 2,239 | 423 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்விற்கான ஆண்டில் திணைக்களத்தின் சிரேட்ட மட்டத்திலான 25 பதவிகள் காணப்பட்டதால், அது அங்கீகரிக்கப்பட்ட பதவி எண்ணிக்கையில் நூற்றுக்கு 61 வரையிலான அதிகூடிய பெறுமதியை கொண்டிருந்தது.

(ஆ) நிறுவனத்தின் தொழிற்பாட்டு நடைமுறையின் பொருட்டு நேரடியாக தலையிடும் இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை மட்டங்களில் 332 பதவி வெற்றிடங்கள் நிலவுதல் காரணமாக, திணைக்களத்தின் செயலாற்றுகைமீது சாதகமற்ற வகையில் தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதை கணக்காய்வின்போது அவதானிக்க கூடியதாக இருந்தது.

### 2.14.2 பணியாற்றொகுதியை பயிற்றுவித்தல்

திணைக்களத்தின் கடந்த 05 ஆண்டு காலப்பகுதிக்குள் பயிற்றுவிப்பு நடவடிக்கைகளின் பொருட்டு ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளை பயன்படுத்தி மேற்கொண்டிருந்த தொகை நூற்றுக்கு 14.6 அல்லது 37.6 என்ற எல்லைக்குள் காணப்பட்டதுடன், பதவியணி பயிற்சி திருப்திகரமான மட்டத்தில் இல்லாமை அவதானிக்கப்பட்டது. மதிப்பிடப்பட்ட ஒதுக்கீட்டில் தேவையான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பணிற்றொகுதி உள்ளடங்கலாக திட்டங்களை தயாரித்து வழிநடாத்தும் முறைமை திணைக்களத்தில் காணப்படவில்லை.